செ.வெ.எண்: 38 24.01.2018

# பத்திரிக்கை செய்தி
# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், காஞ்சிபுரம் மண்டலம்

காரீப் பருவம் 2017–18 ல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணிபுரிய பருவகால பட்டியல் எழுத்தர்கள் மாத ஊதியம் ரூ.2410 + அகவிலைப்படி, பருவகால உதவுபவர்கள் மாத ஊதியம் ரூ.2359 + அகவிலைப்படி மற்றும் பருவகால காவலர்கள் மாத ஊதியம் ரூ.2359 + அகவிலைப்படி என்ற நிலையில் பணிபுரிய தற்காலிக காலி பணியிடங்களுக்காக மண்டல மேலாளர், மண்டல அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பல்லவன் நகர், வந்தவாசி சாலை, காஞ்சிபுரம் – 631 501 என்ற முகவரிக்கு 01.01.2018 அன்றைய தேதியில் 18 வயது பூர்த்தி அடைந்த கீழே தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படி தகுதி உடைய காஞ்சிபுரம் மாவட்டத்தை மட்டும் சேர்ந்தவர்கள் உரிய (1) கல்விச்சான்று, (2) சாதிச்சான்று, (3) வேலை வாய்ப்பு அலுவலக பதிவிற்கான சான்று, (4) குடும்ப அட்டை, (5) இருப்பிடச் சான்று, (6) வயது உறுதிச் சான்று மற்றும் (7) ஆதார் அட்டை முன்னாள் இராணுவ வீரராக இருப்பின் அதற்கான சான்று ஆகியவற்றுடன் 2 Passport Size புகைப்படத்துடன் காலை 11.00 மணியளவில் கீழ்காணும் தேதிகளில் நேரில் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலே தெரிவிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் ஆய்வின் அடிப்படையில் (Certificate Verification) தேர்ச்சி பெறுபவர்கள் நிர்ணயிக்கப்படும் மற்றொரு தேதியில் நேர்காணலுக்கு அறிவிப்பாணை மூலம் அழைக்கப்படுவார்கள். நேர்காணலில் தேர்வு செய்யப்படுபவர்களுக்குரிய பணி ஆணை பின்பு தபால் மூலமாக அனுப்பப்படும். தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் பணியின் தேவைக் கேற்பவே பணியமர்த்தப்படுவார்கள் என்பதால், பருவகால பணி முடிந்தவுடன் “வேலையில்லையேல் பணியில்லை” என்ற அடிப்படையில் பணி நீக்கம் / நிறுத்தம் (Ousting) செய்யப்படுவார்கள்.

| வ. எண் | பணியின் பெயர் | விண்ணப்பதாரரின் இன வகைகள் | வயது வரம்பு | கல்வி தகுதி | நேரடியாக ஆஜராக வேண்டிய நாள் மற்றும் கிழமை |
|---|---|---|---|---|---|
| 1) | பருவகால பட்டியல் எழுத்தர் | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் | 35 | அறிவியல் பிரிவில் பிரதான பாடம் தாவரவியல் (அல்லது) விலங்கியல் (B.Sc., Botany (or) Zoology | 31.01.2018 (புதன்) |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 32 | | |
| | | இதர வகுப்பினர் | 30 | | |
| 2) | பருவகால உதவுபவர் | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் | 35 | +2 தேர்ச்சி | 02.02.2018 (வெள்ளி) |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 32 | | |
| | | இதர வகுப்பினர் | 30 | | |
| 3) | பருவகால காவலர் | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர் | 35 | 8-வது தேர்ச்சி அல்லது 10-வது தவறியவர்கள் | 07.02.2018 (புதன்) |
| | | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) | 32 | | |
| | | இதர வகுப்பினர் | 30 | | |

ஒம்/– ஜெ. உமாசங்கர் மகேஸ்வரன்,
மண்டல மேலாளர்.

//உத்தரவின் படி//

கண்காணிப்பாளர். 23/1/18